# S.J.S.T கிராமப்புற மருத்துவமனை பணிகள்

நமது கிராமப்புற மருத்துவமனை நல்ல முறையில் இயங்கி வருவதற்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறோம். இதில் பணிபுரியும் மருத்துவ அதிகாரி **Dr.Mrs.Angel** அவர்களுக்காகவும், அவர்களோடு சேர்ந்து பணியாற்றும் மருத்துவ குழுவிற்காகவும் ஜெபியுங்கள். தொடர்ந்து நமது மருத்துவமனை அநேகருக்கு பிரயோஜனமாக இருக்கவும், **கர்த்தருக்கு சித்தமானால் நல்ல முறையில் ஒரு தியேட்டர் கட்டப்படவும், அதில் வார்டுகள் கட்டப்படவும் ஜெபியுங்கள். மருத்துவபணிகளுக்கு இந்நாள் வரை உதவி செய்து வருகிற பங்காளர்களுக்கு எங்களது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.**






Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2022-2024 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month

## சென்னையில் பங்காளர் சந்திப்பு

மே 6 சனிக்கிழமை

இடம்: BKN மினி ஹால்,
ரித்தர்டன் ரோடு, வெப்பேரி, சென்னை.

நேரம் : காலை 9.00 மணி முதல் மதியம் 1.30 மணி வரை
மாலை 4.00 மணி முதல் இரவு 8.30 மணி வரை

ஜெபம் மற்றும் ஆலோசனை: Dr. ஆனந்த ஸ்திரா

## வேலூரில் அற்புதத்தின் மாலை

மே 7 ஞாயிற்று கிழமை

Place : CSI Central Church,
Stanes Mandapam,
Anna salai, Vellore.

நேரம் : மாலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை

தேவ செய்தி : Dr. ஆனந்த ஸ்திரா

தொடர்புக்கு : 0431 – 2741926 & 94888 45627

## திருநெல்வேலியில் அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்

மே 13 சனிக்கிழமை

இடம்: செல்வி மஹால்,
காளிமார்க் பேருந்து நிறுத்தம் அருகில்,
முருகன் குறிச்சி, பாளையங்கோட்டை,
திருநெல்வேலி.



நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை

தேவ செய்தி : Dr. ஆனந்த ஸ்திரா
Mrs. மார்கிரேட் ஸ்திரா

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,

# அன்பரின் ஊழியம்

# ANBARIN OOZHIYAM

மலர்:9 இதழ்:5 மே 2023 தனிபிரதி- ரூ.20/- ஆண்டு சந்தா- ரூ.200/-
VOL: 9 ISSUE NO : 5 May 2023 Single Copy - Rs 20/- ANNUAL SUBSCRIPTION: RS 200/-



## தேவனால் எல்லாம் கூடும் (மாற்கு 10:27)

# மனிதரால் முற்றும் குணப்படுத்த முடியாத தீராத வியாதிகளை நீக்கி அற்புதம் செய்த அற்புதர் இயேசு



என் பெயர் பிந்து. கணவர் பெயர் ஷியாம். 2019-ம் ஆண்டு எங்களுக்கு திருமணம் ஆனது. நாங்கள் இருவரும் தீராத ஒரு வியாதியினால் அதிக கஷ்டப்பட்டோம். அநேக வைத்தியர்களால் எங்களை குணமாக்க முடியாத நிலையில் மிகுந்த கண்ணீருடன் வாழ்ந்துக் கொண்டிருந்தோம். அதனால் இருவரும் பிரிந்து வாழக்கூடிய ஒரு சூழ்நிலையும் உண்டானது.

Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் ஆந்திராவில் நடத்துகிற எல்லா கூட்டங்களுக்கும் நான் தவறாமல் சென்று கலந்துக் கொள்வேன். கூட்டத்தில் சகோதரரை சந்திக்கும் பொழுதெல்லாம் எனக்கு அழுகை வந்துவிடும். அந்த அளவிற்கு அதிக பாரத்துடன் இருந்தேன்.

எங்கள் நிலையை அறிந்த சகோதரர் எங்கள் இருவருக்காகவும் அதிக உருக்கமாய் கண்ணீரோடு ஜெபித்தார்கள். சகோதரரின் மனதுருக்கம் நிறைந்த ஜெபத்தைக் கேட்டு கர்த்தர் தாமே எங்கள் இருவருக்கும் அற்புத சுகத்தைக் கொடுத்தார். அதன்பின் நாங்கள் இருவரும் சகோதரர் கொடுத்த ஆலோசனைபடி இணைந்து வாழ்ந்தோம். தொடர்ந்து எடுக்கப்பட்ட அனைத்து மருத்துவ பரிசோதனையிலும் அந்த வியாதி முற்றிலும் நீங்கிவிட்டது என்பதை மருத்துவர்கள் மூலம் அறிந்து அதிக மகிழ்ச்சி அடைந்தோம். எங்களை சுகமாக்கிய கர்த்தரை மனதார ஸ்தோத்தரித்தோம்.

அதன்பின் எனக்கு இரண்டு முறை அபார்ஷன் ஆனது. சகோதரரிடம் அதைக்குறித்து சொன்னபொழுது கலங்காதீர்கள். அபார்ஷன் ஆன இரு குழந்தைகளும் பரலோகத்தில் இருப்பார்கள் அதற்கு பதில் கர்த்தர் ஒரு குழந்தையைத் தருவார் எனக்கூறி எங்களை ஆறுதல்படுத்தி ஜெபித்து அனுப்பினார்கள். ஜெபத்திற்குப்பின் 3-வது முறை கருவில் குழந்தை தங்கியது. குழந்தை கருவில் இருந்த 9-வது மாதம் ஒரு சில பிரச்சனைகள் ஏற்பட்டது. அத்துடன் கருவில் உள்ள குழந்தைக்கும் அந்த நோய் இருக்குமெனக் கூறினார்கள். உடனே சகோதரர் அவர்களை தொடர்புக்கொண்டு ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். சகோதரர் மீண்டும் பாரத்தோடு ஜெபித்து குழந்தைக்கு எந்த பிரச்சனையும் இருக்காது எனக்கூறினார்கள். தேவ கிருபையால் எந்த குறைப்பாடும், எந்த நோயும் இல்லாமல் சுகபிரசவத்தில் அழகிய பெண் குழந்தையை கர்த்தர் கொடுத்தார். எங்கள் வாழ்வில் கர்த்தர் செய்த மகத்தான அதிசயங்களை நினைத்து கர்த்தரை துதிக்கிறோம்.

எங்களுக்காக ஊக்கமாய் ஜெபித்த சகோதரர் அவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவிக்கிறோம். ஊழியத்தை தொடர்ந்து உற்சாகமாய் தாங்குகிறோம்.

திருமதி. பிந்து. இராஜமன்றி.

## Rev.Dr.A. ஜாஷ்வா அவர்கள்
## ஜெபத்தினால் மகத்துவ தேவன் செய்த அற்புதங்கள்!
## தேவ நாமம் மகிமைக்காக!



### திடீரென ஏற்பட்ட பெலவீனங்களை நீக்கி நல்ல சுகத்துடன் வாழ தயை செய்த கர்த்தர்



என் பெயர் பெயர் டெல்பின் மேரி. தாம்பரத்தில் நடைபெறுகிற உங்கள் விடுதலையின் நாள் கூட்டத்திற்கு தொடர்ந்து வந்துக்கொண்டிருக்கிறேன். என்னுடைய இளைய மருமகளுக்கு இரண்டு சிறுநீரகத்திலும் கற்கள் உருவாகிவிட்டது. இந்த நிலையில் Rev.Dr.A.ஜாஷ்வா அவர்களிடம் மருமகளுக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். பாஸ்டர் அவர்கள் ஜெபித்து விட்டு விரைவில் அந்த கற்களை ஆப்ரேஷன் வாயிலாக எடுப்பது நல்லது என ஆலோசனை கூறினார்கள். அதன்படி ஆப்ரேஷன் மூலம் அந்த கற்களை எடுக்கும்படி கர்த்தர் உதவி செய்தார். இப்பொழுது மருமகள் நல்ல சுகத்துடன் இருக்கிறாள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

எனக்கு சரீரத்தில் அடிக்கடி பெலவீனங்கள் ஏற்பட்டது. அதற்காகவும் பாஸ்டர் அவர்களிடம் சொல்லி ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டேன். தேவ கிருபையால் நானும் நல்ல சுகத்துடன் இருக்கிறேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். ஏற்ற நேரத்தில் ஜெபித்து ஆலோசனை கொடுத்த பாஸ்டருக்கு எங்கள் நன்றியைத் தெரிவிக்கிறோம்.

- திருமதி. டெல்பின் மேரி, சென்னை.

### ஜெபத்தைக் கேட்கும் கர்த்தர்!



என் பெயர் ராணி. நாங்கள் குடியிருந்த வீட்டை திடீரென காலி செய்யும்படி வீட்டு உரிமையாளர் சொல்லி விட்டார். அத்துடன் உடன் குடியிருந்தவர்களின் தொந்தரவும் நாளுக்கு நாள் அதிகமானது. அந்த நேரத்தில் Rev.Dr.A.ஜாஷ்வா அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக எங்கள் சூழ்நிலையைச் சொல்லி ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். உடனே பாஸ்டர் பாரத்துடன் ஜெபித்துவிட்டு எந்த சிரமமும் இல்லாமல் வெகு சீக்கிரத்தில் வீடு கிடைத்து விடும் என சொன்னார்கள். அதன்படி எனக்கு ஒரே நாளிலே எல்லா வசதிகளும் நிறைந்த நல்ல ஒரு வீட்டை கர்த்தர் தந்து உதவிசெய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

- திருமதி. ராணி, MGR நகர்

### அதிகாரிகளின் கண்களில் தயை உண்டாகச் செய்த கர்த்தர்!



என் பெயர் வசந்தி. என் தங்கைக்கு திருமணமாகி 15 ஆண்டுகள் ஆகியும் ரேஷன் கார்டு கிடைக்காமல் கஷ்டப்பட்டாள். அத்துடன் ஒன்றரை வருடம் முன்பு ரேஷன் கார்டு கிடைக்கப்போகும் நேரத்தில் தங்கையின் கணவர் பெயர் சேர்க்கமுடியாது. ஏனென்றால் அவருக்கு சரியான ஆதாரம் எதுவும் இல்லை என கூறிவிட்டனர். இந்த நிலையில் நான் சென்னையில் நடைபெறுகிற உங்கள் விடுதலையின் நாள் கூட்டத்திற்கு வந்திருந்து, தங்கைக்கு ரேஷன் கார்டு கிடைத்தால் சாட்சி சொல்வதாக பொருத்தனையோடு ஜெபித்து சென்றேன்.

கர்த்தர் தாமே ஜெபத்தைக் கேட்டு ஆச்சரியமான முறையில் கணவர் பெயரையும் சேர்த்து ரேஷன் கார்டு கிடைப்பதற்கு என் தங்கைக்கு உதவி செய்தார். கர்த்தருடைய நாமத்திற்கு சகல துதி, ஸ்தோத்திரங்களைசெலுத்துகிறேன். திருமதி. வசந்தி, சென்னை.

### சகல பெலவீனத்தையும் மாற்றி சுகம் தந்த கர்த்தர்!



என் பெயர் ஜோஷ்வா சுந்தரமூர்த்தி. சமீபத்தில் சுகர் நோயினால் அதிக பெலவீனமாக இருந்தேன். சுகர் நோயினால் என் கால்விரல்களை எடுக்கும்படி ஆகிவிட்டது. நடக்க கூட பெலன் இல்லாமல் இருந்தேன். அந்த நேரத்தில் Rev.Dr.A. ஜாஷ்வா அவர்கள் தொலைபேசி வாயிலாக தொடர்புக்கொண்டு என்னுடைய உடல் நலத்தைக் குறித்து விசாரித்து ஜெபித்தார்கள். கர்த்தர் இப்பொழுது நல்ல சுகம் தந்து தாம்பரம் உங்கள் விடுதலையின் நாள் கூட்டத்திற்கு வருவதற்கு ஒத்தாசை செய்துள்ளார். அதற்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். எனக்காக பாரத்துடன் ஜெபித்த பாஸ்டர் மற்றும் ஊழியத்தில் உள்ள ஜெப வீரர்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவிக்கிறேன்.

- திரு. ஜோஷ்வா சுந்தரமூர்த்தி, சென்னை.



# அன்பரின் ஊழியம்

மலர்:9 ◆ மே 2023 ◆ இதழ் 5

## உங்கள் ஆசிரியரிடமிருந்து...

ஜீவனின் அதிபதியாகிய நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் உங்களை அன்போடு வாழ்த்துகிறேன்.

இந்த நாட்களில் கர்த்தர் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் நல்ல சுகத்துடன் காப்பாராக. நம்மைச்சுற்றி தொற்று நோயின் தாக்கம் ஆங்காங்கே இருப்பினும் கர்த்தர் உங்களை நல்ல சுகத்துடன் வழி நடத்துவார். ஒவ்வொரு நாளுக்கும் உரிய பெலனும் ஆரோக்கியமும் உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் உண்டாகும். கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன் கொடுப்பார். **கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி, அவர்களை ஆசீர் வதிப்பார். சங்கீதம் 29:11**

உலகெங்கும் பொருளாதார மந்தநிலை **(Recession)** ஏற்படும் நிலை இருக்கிறது. ஆனால் மகாவறட்சியான காலங்களிலும் திருப்தியாக்கும் கர்த்தர் உங்களை நித்தமும் வழி நடத்துவார். **கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகாவறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ள தாக்குவார், நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும், வற்றாத நீரூற்றைப் போலவும் இருப்பாய். ஏசாயா 58:11.** உங்கள் எல்லைகளில் எத்தகைய வறட்சி இருந்தாலும் கர்த்தர் தாமே அதை நீக்குவார். வற்றாத நீரூற்றையும் ஆசீர்வாதத் தையும் அவரே கட்டளையிடுவார்.

- **ஏப்ரல் மாதம் நடைபெற்ற அனைத்து கூட்டங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார்.**
- **மே மாதம் நடைபெறயிருக்கிற அனைத்து கூட்டங்களுக்காகவும் ஜெபியுங்கள். கூட்டங்களுக்கு ஸ்பான்சர் செய்யும்படி விரும்புகிற பங்காளர்கள் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள். கூட்டங்களுக்கு தவறாமல் வாருங்கள்.**
- **மே மாதத்தில் உங்கள் பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் பள்ளி, கல்லூரியில் சேருவதற் கான இடங்கள் கிடைக்க ஜெபிக்கிறோம். 10, 12-ம் வகுப்பு மற்றும் பிற தேர்வுகளை எழுதியுள்ள பிள்ளைகள் அனைவருக்கும் கர்த்தர் நல்ல மதிப்பெண்களைத் தருவார்.**


ஆசிரியர் / வெளியிடுபவர்: **Dr. ஜேன் ஜாஷ்வா**

| சந்தா விபரம் | | | |
| --- | --- | --- | --- |
| இந்தியா | : | ஆண்டு சந்தா ரூ.200/-. | ஆயுள் சந்தா ரூ.2,000/-. |
| வெளிநாடு | : | ஆண்டு சந்தா ரூ.1,500/-. | ஆயுள் சந்தா ரூ.15,000/-. |



24 மணி நேர ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: 94888 45627
காலை 9.30 மணி முதல் இரவு 7.00 மணிவரை ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய எண்: 80987 42638
Telugu & Hindi : 99445 36343, Malayalam : 94889 32937, Kannada : 90031 17205
e-mail: info@mojindia.org website: www.ministryofjesus.in
முகவரி:- அன்பரின் ஊழியம், 40, S.P.K. தெரு, உறையூர், திருச்சி - 620 003. Address:- Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003.

- **மே மாதம் 17,18,19, 20 ஆகிய தேதிகளில் திருச்சி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் ஆங்கிலம், தெலுங்கு மொழியில் அப்போஸ்தல தீர்க்கதரிசன முகாம் நடைபெறயிருக்கிறது.** ஆங்கிலம், தெலுங்கு தெரிந்த பிள்ளைகள் கலந்துக் கொண்டு பயன் பெறுங்கள். இதன் விபரத்தை பத்தரிக்கையில் பார்த்து அறிந்துக் கொள்ளுங்கள்.
- **நமது வெப்சைட் பகுதிகளை பாருங்கள். youtube-ல் நமது Ministry of Jesus, My Deliverance Church, Dr Jane Joshua சேனல்களை subscribe செய்யுங்கள். காலை தோறும் வெளிவருகிற அனுதின அற்புதம் நிகழ்ச்சியைப்பாருங்கள். உங்கள் வாட்ஸ் அப் நம்பரை எங்களுக்குத் தெரியப் படுத்துங்கள்.**
- உங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் வேலை இல்லாமல் இருப்பார்களானால் நீங்கள் பொருத்தனையோடு ஜெபியுங்கள். கர்த்தர் உங்கள் ஜெபத்தைக் கேட்டு அற்புதம் செய்வார். நாங்களும் அவர்களுக் காக ஜெபிக்கிறோம்.
- ஊழியத்தில் வாஞ்சையுள்ள பிள்ளைகள் நம் ஊழியத்துடன் இணைந்து தமிழ், ஆங்கிலம், தெலுங்கு பிரிவுகளில் வேலை செய்யலாம். ஜெபத்தில் வாஞ்சையுள்ள பிள்ளைகளும் தொலைபேசி ஊழியத்தில் இணைந்து செயல்படலாம். அதற்கான விபரங்களை பத்திரிக்கையின் 21-ம் பக்கத்தில் தெளிவாக காணலாம்.

எங்கள் அப்பா அம்மா இருவரின் நல்ல உடல் நலத்திற்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள். எங்கள் அனைவருடைய நல்ல சுகத்திற்காகவும், ஊழியத்திற்காகவும் ஜெபியுங்கள். கர்த்தரும் இரட்சகருமாகிய நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடும் இருப்பதாக.

**இம்மாத வாக்குத்தத்த வசனங்கள்**

**பிலிப்பியர் 4:19**
**உபாகமம் 15:5-6**
**ஆதியாகமம் 26:1-13**

கிறிஸ்துவின் பணியில்
**Dr. ஜேன் ஜாஷ்வா**


## திருச்சியில் தனி ஜெபம் மற்றும் ஆலோசனை

மே 28 ஞாயிற்றுக் கிழமை

நேரம் : மதியம் 3.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை

தனி ஜெபம் & ஆலோசனை வழங்குபவர்


Dr. ஜேன் ஜாஷ்வா

குடும்ப ஆலோசனைகள், படிப்பு, வேலை, எதிர்காலம் மற்றும் ஆவிக்குரிய ஆலோசனைகளை பெற விரும்புகிறவர்கள் இந்த நாளில் நேரில் வாருங்கள். உங்களுக்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்படும். உங்களுக்காக தனித்தனியாக ஜெபம் ஏறெடுக்கப்படும்.

கீழ்க்கண்ட இந்த எண்ணிற்கு தொடர்புக்கொண்டு முன்பதிவு செய்தப் பிறகு நேரில் வரும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தொலைபேசி எண்கள் : 94888 45627, 80987 42638, 0431 - 2741925 (10am-6pm)

Tamil Whats App No: 95004 87059




**New Song ! Watch Now on ▶ MINISTRY OF JESUS**

## அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சி நேரங்கள்

**நம்பிக்கை TELEVISION**

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு

இரவு 8.30 – 9.00

தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

**ARADANA TV**

புதன், வியாழன், வெள்ளி

இரவு 7.00 – 7.30

மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

**HARVEST TV കേരളം**

சனி

இரவு 7.30 – 8.00




dranandastira@mojindia.org, margret@mojindia.org,
joshua@mojindia.org, jane@mojindia.org,
info@mojindia.org

# புது எண்ணெயால் அபிஷேகம் பண்ணப்படுகிறேன்!



தேவ செய்தி : Dr. ஜேன் ஜாஷ்வா

எனக்கன்பான சகோதர, சகோதரிகளே!

நம் கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன். இந்த தேவ செய்தியின் வாயிலாக நீங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் மேன்மேலும் வளர விரும்புகிறேன். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

**என் கொம்பைக் காண்டாமிருகத்தின் கொம்பைப்போல உயர்த்துவீர்; புது எண்ணெயால் அபிஷேகம் பண்ணப்படுகிறேன். சங்கீதம் 92:10** இந்த சங்கீதத்தின் தலைப்பு பகுதியில் ஓய்வு நாளின் பாட்டாகிய சங்கீதம் என எழுதப்பட்டிருக்கும். அநேக சமயங்களில் நாம் அதைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்காமல் வாசித்துவிட்டு கடந்து சென்றுவிடுவோம். தொடர்ந்து அந்த சங்கீதத்தின் கடைசி பகுதியில் **"நீதிமான் பனையை போல செழிப்பான், நீதிமான்கள் வயதானாலும், அவர்கள் முதிர் வயதிலும் கனி தந்து புஷ்டியும், பசுமையாயிருப்பார்கள்"** என்றும் சொல்லப்பட்டுள்ளது. இந்த பகுதி முழுவதும் ஆசீர்வாதமான வசனங்கள்தான் உள்ளது. ஆனால் புது எண்ணெய் என்ற ஒரு பகுதியைக் குறித்து நாம் பார்ப்போம். புது எண்ணெய் என்று சொல்லும் பொழுது நாம் புரிந்துகொள்ளவேண்டிய அநேக காரியங்கள் உள்ளது.

எண்ணெயால் அபிஷேகம் பண்ணப்படுவதைக் குறித்து வேதாகமத்தில் அநேக இடங்களில் எழுதப்பட்டிருக்கிறதை நாம் அறிவோம். ஆதியாகமத்திலிருந்து வாசிக்கும்பொழுது ஆசாரியர்கள், தீர்க்கதரிசிகள், ராஜாக்கள் போன்றோர் விசேஷித்த காரியங்களை செய்ய வேண்டும் என்று கர்த்தர் விரும்பின பொழுதெல்லாம், அவர்களை எண்ணெயால் அபிஷேகம் பண்ணும்படி கட்டளையிட்டார். கர்த்தராலே கொடுக்கப்பட்ட ஒரு பொறுப்பை நிறைவேற்றுகிறதற்கு முன்பு எண்ணெயால் அபிஷேகம் செய்வது என்பது ஒரு மணப்பெண்ணை திருமணத்திற்காக தயார் செய்வது போல,ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக ஒருவரை தயார்படுத்தி உறுதி செய்யும் வகையில்தான் எண்ணெய் அபிஷேகம் செய்யப்படுகிறது.

பழைய ஏற்பாடு காலத்தில் எண்ணெயால் அபிஷேகம் செய்தார்கள். இப்பொழுது எனக்கு இந்த எண்ணெயால் என்ன நன்மை? இதனால் என் வாழ்க்கையில் என்ன பயன் என்று ஒருவேளை நீங்கள் நினைக்கலாம்.

அன்பானவர்களே! புது எண்ணெய் என்று சொல்லும்போது பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை குறிக்கிறது. அபிஷேகம் பரிசுத்த ஆவியானவரின் நிறைவை குறிக்கிறது. பழைய ஏற்பாட்டிலே நியாயாதிபதிகள், ஆசாரியர்கள் மற்றும் ராஜாக்கள் இந்த எண்ணெயால் அபிஷேகம் பண்ணப்படுவது தேவனுடைய ஆவியானவர் அவர்களுக்குள்ளே, அவர்கள் செய்ய வேண்டிய காரியங்களுக்காக அவர்களை திடப்படுத்தி இருக்கிறார். அவர்கள் பிரித்தெடுக்கப்பட்டவர்கள் என்பதை குறிக்கும் அடையாளமாக இருக்கிறது. ஆம்! எண்ணெயால் அபிஷேகம் செய்யப்படும் பொழுது அங்கே ஆவியானவர் இறங்குகிறார் என்பது அர்த்தமாகும். நமக்குள்ளும் இந்த **பரிசுத்த ஆவியானவர் வரும்பொழுது சகலமும் புதிதாகிறது, சகலமும் மாற்றம் பெறுகிறது.** அவற்றைக் குறித்து நாம் தெளிவாக பார்ப்போம்.

## புது எண்ணெயின் அபிஷேகத்தினால் புது கிருபை கிடைக்கிறது!

பரிசுத்த ஆவியானவர் புது எண்ணெயாக நமக்குள் ஊற்றப்படும் பொழுது அங்கே புதிய கிருபை புதிய இரக்கம் உண்டாகிறது.

சவுலுடைய வாழ்க்கையில் அவன் இராஜாவாக இருந்த நேரத்தில் ஒரு தவறு செய்து விட்டான், தேவனுக்கு அவன் கீழ்ப்படியவில்லை. சாமுவேல் தீர்க்கதரிசி வருவான். அவன் வந்த பிறகு அந்த பலியை செலுத்த வேண்டும் எனவே காத்திரு என்பது கர்த்தருடைய கட்டளை. ஆனால் சவுல் காத்திருக்க வில்லை. இது சாதாரண ஒரு காரியம் தான். பிரதான ஆசாரியன் வராமல், சாமுவேல் வந்து பலி செலுத்தாமல் போருக்கு போக முடியாது என்பது அவனுக்கு நன்றாகவே தெரியும். ஆனால் அவசரப்படு கிறான், ஜனங்கள் எல்லாம் பிரிந்து பிரிந்து ஓடுகிறார்கள். அந்த ஜனங்கள் ஓடிச்செல்வதற்கு முன்பு நான் இந்த பலியை செலுத்த வேண்டும் என்று பலியை செலுத்திவிட்டான். அங்கே சாமுவேல் வந்து "என்ன காரியம் செய்தீர்" என்று கேட்கிறான். ஜனங்கள் எல்லாம் பிரிந்து போகிறார்கள் என்று நான் பலி செலுத்தி விட்டேன் என்று கூறுகிறான். இது ஒரு காரியம். அடுத்தது, அமலேக்கியர் எல்லோரையும் கொன்றுவிடு என்று கர்த்தர் சொல்கிறார். ஆனால் சவுல் தேவையானவர்களை கொன்றுவிட்டு, தேவையில்லாதவர்களை வைத்து விட்டு அவர்களை ஜனங்கள் அடிமைகளாக எடுத்துக் கொள்வதற்கு இருக்கட்டும் என்று சொல்கிறான். இது இரண்டாவது காரியம். இதனால் சர்வ வல்லமையுள்ள கர்த்தர் தனது வார்த்தைக்கு கீழ்ப்படியாத சவுல் இனிமேல் ராஜாவாக இருக்கக்கூடாது, என் சமூகத்தை விட்டு அவனை தள்ளிவிட்டேன் என்கிறார்.

அடுத்ததாக தாவீது ராஜாவாக அபிஷேகம் பண்ணப்படுகிறான். பல வருடங்கள் அவனுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டது. வனாந்தரத்தில் அலைந்தான், எல்லாவிதத்திலும் கஷ்டப்பட்டான். முடிவில் ராஜாவாகிறான். ராஜாவான கொஞ்ச நாட்களில் அவனுடைய சேனையில் வேலை பார்த்த உரியாவின் மனைவியை இச்சிக்கிறான், இச்சித்தது மாத்திரமல்ல. இவள் தனக்கு வேண்டும் என்று உரியாவை போருக்கு அனுப்பி கொன்று போடுகிறான். தாவீது செய்தது மிகப்பெரிய தவறு. அதுமாத்திரமல்ல, தாவீது கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் ஜனங்களை இலக்கம் பார்க்கிறான். எனவே வாதை ஜனங்களுக்கு மத்தியில் உண்டானது. சவுல், தாவீது இந்த இருவரில் யார் செய்தது பெரிய தவறு என்றால் தாவீது செய்தது தான் என்று அனைவரும் சொல்வோம். ஆனால் தாவீதோ தவறு செய்தவுடன் அதை உணர்ந்து தேவனிடம் தன்னை தாழ்மைப்படுத்தி மன்னிப்பு கேட்கிறான். இப்படி தாவீதை போல, சவுல் தான் செய்த தவற்றை ஒப்புக்கொள்ளவே இல்லை.

**சங்கீதம் 89:20-ம்** வசனம் **"என் தாசனாகிய தாவீதைக்கண்டு பிடித்தேன், என் பரிசுத்த தைலத்தினால் அவனை அபிஷேகம் பண்ணினேன்" 24-ம் வசனத்தில் "என் உண்மையும் என் கிருபையும் அவனோடிருக்கும்; என் நாமத்தினால் அவன் கொம்பு உயரும்" 28-ம் வசனத்தில் "என் கிருபையை என்றென்றைக்கும் அவனுக்காகக் காப்பேன், என் உடன்படிக்கை அவனுக்காக உறுதிப்படுத்தப்படும்" 33-ம் வசனத்தில் "ஆனாலும் என் கிருபையை அவனை விட்டு விலக்காமலும், என் உண்மையில் பிசகாமலும் இருப்பேன்"** என்றும் தேவன் கூறுகிறார். **உபாகமம் 5:10-ல்** என்னிடத்தில் அன்பு கூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளு கிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ்செய்கிறவராயிருக்கிறேன் என்று தேவன் கூறினார். ஆனால் இங்கு தாவீதுக்கோ **"என்றென்றைக்கும் என் கிருபை உன்னோடிருக்கும்"** என்று சொல்கிறார்.

தாவீதின் மேல் தேவன் கிருபையாக இருந்தாரா அல்லது சவுலின் மீது தேவன் கிருபையாக இருந்தாரா? தாவீதின் மீதுதான் தேவன் அதிக கிருபையாக இருந்தார். எங்கே பாவம் பெருகினதோ அங்கே கிருபை பெருகினது. **தாவீதின் மேலிருந்த அந்த கிருபையே புது கிருபை.**

சவுல் மீது இருந்தது ஒரு இரக்கம். தவறு செய்தான், தள்ளிவிட்டார், முடிந்து போய்விட்டது. **சங்கீதம் 66:20-ல்** தாவீது **"தமது கிருபையை என்னை விட்டு விலக்காமல் இருந்த தேவனுக்கு ஸ்தோத்திரம்"** என்கிறான். தாவீது தவறு செய்துவிட்டான், இவன் அவ்வளவுதான் என்று கர்த்தர் சொல்லவில்லை. உன் சந்ததியிலே வரும் உன் பிள்ளைகள் மேலே தலைமுறை தலைமுறையாக நான் கிருபை உள்ளவராக இருப்பேன் என்று சொல்கிறார். சவுலுக்கு சொன்னது போல இல்லாமல் உன் பிள்ளைகளிடத்தில் இருந்து என் கிருபையை விலக்க மாட்டேன் என்று சொல்கிறார். அதையே தாவீது உணர்ந்து ஸ்தோத்தரித்து, "கர்த்தாவே! நான் எவ்வளவு பெரிய குற்றவாளி, தகுதியற்றவன். ஆனால் உம்முடைய கிருபை புதுவிதமாக என்னுடைய வாழ்க்கையில் வெளிப்பட்டதற்கு ஸ்தோத்திரம் என்று சொல்கிறான்.

இராஜாக்கள், நாளாகமம் இந்த புத்தகங்களை எல்லாம் படிப்பீர்கள் என்றால் எத்தனையோ ராஜாக்கள் தவறு செய்தார்கள். பிறகு பாபிலோனுக்கு சிறைபிடிக்கப்பட்டு கொண்டு போகப்பட்டார்கள். ஆனாலும் கர்த்தர் அந்த சந்ததியை மறக்கவே இல்லை. திரும்பவும் வரப்பண்ணினார். **தாவீதின் சந்ததியில் இயேசு கிறிஸ்து தோன்றும்படி செய்தார்.**

சிங்காசனம் என்றென்றும் தாவீதினுடைய சந்ததியில் இருக்க வேண்டுமென கர்த்தர் விரும்பி, தம் கிருபையை அவன் சந்ததியை விட்டு விலக்காமல்

இருக்கிறார். அது தான் புது எண்ணெயால் புது அபிஷேகத்தால் வருகிற கிருபை.

இயேசுகிறிஸ்து கிருபையின் அவதாரமாய், கிருபையே உருவானவராக பிறந்தார். **"அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின் மேல் கிருபை பெற்றோம்" என்று யோவான் 1:16** கூறுகிறது. அவர் தான் கிருபை. சத்தியமும், கிருபையும் இயேசு கிறிஸ்துவின் மூலமாக உண்டாயின. அவர் மூலமாகத்தான் நாம் கிருபையை பெற்றுள்ளோம். அதனால் தான் இன்னமும் தாவீதை போல தவறுகள் செய்தாலும் கர்த்தர் நம்மை அழிக்காமல் உயிரோடு வைத்திருக்கிறார். யாரும் தைரியமாக கர்த்தருடைய சிங்காசனத்திற்கு முன்பாக, பரிசுத்த ஸ்தலத்திற்கு முன்பாக போக முடியாது. இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் தோன்றினதின் நிமித்தம் அவர் நமக்கு அருளின பரிசுத்த ஆவியானவர் மூலமாக இந்த புதிய கிருபை நமக்கு அருளப்பட்டது. எவ்வளவு தவறு செய்தாலும் நம்மை நேசித்து அரவணைக்கிறது அவருடைய கிருபை. அவரை விட்டு தூரமாக ஓடினாலும் பிடித்து இழுப்பது தேவனுடைய கிருபை. அதனால் தான் **"மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று, உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார்"** என்று ஏசாயா தீர்க்கதரிசி மூலமாக கர்த்தர் நம்மைப் பார்த்து கூறுகிறார். தேவன் நம்மை கிருபையினாலே இரட்சித்தார். இந்த கிருபைக்கு எல்லை என்பதில்லை. **பேதுரு "அவர் தாமதிக்கிறார் என்று நினைக்காதீர்கள். அவர் நீடிய பொறுமை உள்ளவராக இருக்கிறார்" (2 பேதுரு 3:9)** எனக் கூறுகிறான். **கிருபையை பெற்றுக் கொள்வதற்கு நேரம் இருக்கும் பொழுதே கிருபாசனத் தண்டையிலே தைரியமாய் சேரக்கடவோம் என்று எபிரெயர் 4:16** கூறுகிறது.

பிரியமான சகோதர, சகோதரிகளே! நாம் வாழ்ந்து கொண்டிருப்பது கிருபையின் காலம். இந்த காலம் எப்பொழுதும் முடியும் என்று தெரியாது. இந்த கிருபை இருந்தபடியால் தான் பேதுரு மூன்று முறை இயேசுவை மறுதலித்தும், கர்த்தர் அவனை தனது திருச்சபைக்கு கல்லாக மாற்றுகிறார். **"ஆண்டவரே! ஜீவனுள்ள வார்த்தை உம்மிடத்தில் தான் உள்ளது, நாங்கள் எங்கே செல்வோம், எல்லாவற்றையும் விட்டுவிட்டு உம்மை பின்பற்றி வருகிறோம்"** என்று கூறினவன், சிலுவை மரணம் என்று வந்த உடன் **"இந்த மனுஷன் யார் என்றே எனக்கு தெரியாது"** என்றான். அப்படிப்பட்ட பேதுருவை **"சீமோனே என்னை நேசிக்கிறாயா"** என்று கேட்டு பெரிய பொறுப்பை அவனிடம் கொடுக்கின்றார். அதனால் தான் அந்த கிருபைக்காக பாடுபட்டார்கள், அந்த கிருபையால் தான் அவர்களால் ஓட முடிந்தது.

பவுலை எடுத்துக்கொள்ளுங்கள், **அப்போஸ்தலர் 7,8,9** அதிகாரங்களை வாசிப்பீர்கள் என்றால் இந்த சவுல் வீடு வீடாக சென்று இயேசுவை பின்பற்றினவர்களை இழுத்து வந்து கொன்றுப் போடுகிறான், துன்புறுத்துகிறான், பிரதான ஆசாரியனிடத்தில் அனுமதி வாங்கிக்கொண்டு செல்கிறான். இந்த மனுஷனையும் அந்த புது கிருபை சந்தித்தது. இயேசு அவனை தமஸ்குவிற்கு போகிற வழியில் சந்திக்கிறார். முள்ளில் உதைக்கிறது உனக்கு கடினமாம் என்கிறார். உடனே அந்த கிருபையிடம் அப்படியே விழுந்து விடுகிறான். அந்த கிருபையினால் தான் பவுல் கடைசி வரைக்கும் தைரியமாய் ஓட முடிந்தது. அதனால் தான் **"பாவிகளை இரட்சிக்க இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார், அதில் பிரதான பாவி நான்"** என்றும் **1 கொரி. 15:10ல் "நான் இருக்கிறது தேவ கிருபையினாலே இருக்கிறேன்"** என்று சொல்லி முடிக்கிறான். இதே பவுல் பழைய ஏற்பாட்டு காலத்தில் வாழ்ந்திருந்தால் இயேசு கிறிஸ்து என்கிற கிருபை அவனுக்கு வெளிப்பட்டே இருக்காது. தேவனுடைய கட்டளையின்படி கல்லெறியப்பட்டு கொலை செய்யப்பட்டிருப்பான். அவனது பெயரே இல்லாமல் போயிருக்கும்.

யோசுவாவின் காலத்தில் ஆமானுக்கு என்ன நடந்தது. அவனை கொலை செய்து அவன் மேல் கற்குவியலை வைத்துவிட்டார்கள். அவனை மாத்திரம் கொலை செய்யாமல் அவன் மனைவி, குழந்தைகள், அவனை சார்ந்தவர்கள் என அனைவரையும் அழித்தார்கள். அப்சலோம் தாவீதிற்கு விரோதமாக எழும்பின பொழுது அங்கே அப்சலோமிற்கும் மிக மோசமான ஒரு முடிவைத் தான் கர்த்தர் கொடுத்தார். மோசேயை எதிர்த்து நின்றவர்களுடைய வாழ்க்கையை பாருங்கள், தாத்தான், அபிராம், கோரேகு போன்ற ஆட்கள் பூமி பிளந்து அப்படியே உள்ளே போய்விட்டார்கள்.

அன்பானவர்களே! அந்த காலங்களை போல இல்லாமல் இப்போது நமக்கு புது கிருபையை, புது எண்ணெயை தேவன் உங்களுக்கு அளிக்கிறார். புது கிருபையினால் தான் நாம் பிழைக்கிறோம், உயிர் வாழ்கிறோம். எனவே இன்றைக்கு அந்த புது கிருபை வேண்டும் என்று தேவனிடம் கேளுங்கள். அந்த புது கிருபை இல்லை என்றால் உங்களால் தொடர்ந்து ஜீவிக்க முடியாது. கடைசி உபத்திரவ காலத்தில் கிருபையின் காலம் முடிந்துவிடும். உபத்திரவ காலம் வரும் பொழுது பரிசுத்த ஆவியானவர் இந்த உலகத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்படுவார். அப்படி எடுத்துக்கொள்ளப்படும்பொழுது இந்த கிருபையை கொடுப்பதற்கு உங்களுக்கு ஒருவருமே இருக்க

மாட்டார்கள். இயேசு இல்லையென்றால் கிருபை இல்லை. அநேகம் பேர் இதை தவறாக புரிந்து கொள்கிறார்கள். வேதம் தெளிவாக **"உபத்திரவ காலம் வரும் முன்பே தேவன் தம்முடைய பிள்ளைகளை எடுத்துக்கொள்வார்"** என்று கூறுகிறது. எசேக்கியேல் தீர்க்கதரிசி **"பட்டணம் எங்கும் போய் எனக்கு பயந்தவர்கள் மீது முத்திரை போடு, அந்த முத்திரை போட்டவர்கள் மேல் தீங்கு வராது"** என்று கூறுகிறார். எனவே அன்பான தேவ பிள்ளைகளே! இந்த கிருபையின் காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். அதை ஒருபோதும் வீணாக்கிவிடாதீர்கள்.

## புது எண்ணெயின் அபிஷேகத்தினால் புதுபெலன் உண்டாகிறது!

இந்த நாட்களில் மனிதன் பெலன் அடைவதற்கு அநேக ஊட்டச்சத்து உணவுகளை உட்கொண்டு வருகிறான். அதிலும் ஒருவர் இதை சாப்பிடு என்கிறார், இன்னொருவர் அதை சாப்பிட வேண்டாம் என்கிறார். எதை நம்புவது, எதை நம்பாமல் இருப்பது என தெரியாமல் மக்கள் தவிப்பதையும் நம்மால் காண முடிகிறது. ஆரோக்கியம், பெலனை தேடி அலைகின்ற காலமாக இது உள்ளது. இந்த காலத்தில் நீங்கள் புது எண்ணெயால் அபிஷேகம் செய்யப்பட்டு வீட்டீர்கள் என்றால் உங்களுக்குள் ஒரு புதுப்பெலன் உண்டாகும். அத்துடன் பரிசுத்த ஆவியானவரின் உன்னத பெலன் அருளப்படும்.

தாவீது **சங்கீதம் 18:32-ல் "என்னை பெலத்தால் இடைகட்டும்"** என கேட்கிறான். தாவீது கோலியாத்திற்கு விரோதமாக சென்றப்பொழுது தாவீதை கோலியாத் கேலி செய்ததற்கு ஒரு காரணம் இருந்தது. தாவீது சிறுவனாக இருந்தான். அவனைப் பார்த்தால் போர் வீரனை போன்ற தோற்றமில்லை. எனவே கோலியாத் அவனை பார்த்து நகைக்கிறான். நான் வாழ்நாள் முழுவதும் போர்க்களத்தில் இருக்கிறவன் என கொக்கரிக்கிறான். தாவீது அதைப்பற்றி எல்லாம் கவலைப்படவே இல்லை. **"அவர் என் கைகளை போருக்கும், என் விரல்களை யுத்தத்திற்கும் படிப்பிக்கிறார்" (சங்கீதம் 144:1)** என்று கூறுகிறான். **தாவீதிற்கு பெலன் கர்த்தரிடத்தி லிருந்து வந்தது. சங்கீதம் 28:7-ல் கர்த்தர் என் பெலன் என்று சொல்கிறான். கர்த்தருடைய பெலத் தினால் கோலியாத்தை தாவீது முறியடிக்கிறான். ஆவிக்குரிய பிரகாரமாக, சரீரப் பிரகாரமாக எல்லாவிதத்திலும் தேவனுடைய பெலன் நமக்குள் இல்லை என்றால் நாம ஒன்றுமில்லை.**

சிம்சோனுக்குள் தேவனுடைய ஆவியானவர் இறங்கினார். ஆவியானவரின் பெலத்தினால் சிங்கத்தின் வாயை தன்னுடைய வெறும் கைகளினால் சிம்சோன் கிழித்து போட்டான். இந்த பெலன் எங்கிருந்து சிம்சோனுக்கு வந்தது. அது மனுஷனுடைய பெலனல்ல. அது அபிஷேகத்தால் வரும் பெலன். கர்த்தர் அவனை பெலப்படுத்தினார்.

பிரியமானவர்களே! மனிதர்களால் செய்ய முடியாத காரியங்களை செய்வதற்குரிய பெலன் அபிஷேகத்தினால் கிடைக்கிறது. உங்களுக்குள் அபிஷேகம் இறங்கும் பொழுது புதிய பெலனால் நீங்கள் இடைகட்டப்பட்டு அந்த காரியத்தை செய்து முடிப்பீர்கள். இந்த பெலன் வரும் பொழுது உள்ளான மனுஷனில் ஒரு மாற்றம் நடக்கிறது.

**எபேசியர் 3:16-ல் பவுல் நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமை யாய்ப் பலப்பட வேண்டுமென கூறுகிறார். ஒவ்வொரு நாளும் நாம் உள்ளான மனுஷனில் பெலப்பட வேண்டும். பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள் இருக்கும் பொழுது தான் அந்த உள்ளான மனுஷனில் பெலன் ஏற்படும்.**

பேதுரு இதற்கு நல்ல உதாரணம், **லூக்கா 22: 32ம்** வசனத்தில் இயேசு **"நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து"** என்று பேதுருவினிடத்தில் கூறுகிறார். பிசாசு என்னிடத்தில் அனுமதி வாங்கி விட்டான். எனவே நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரனை ஸ்திரப்படுத்து என்கிறார். அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் அக்கினி மயமான நாவுகள் அவர்கள் மீது இறங்கினபொழுது பேதுரு பெலப்பட்டான். அதனால் தான் இயேசு "நீங்கள் எருசலேமில் காத்திருங்கள், உன்னதத்தி லிருந்து பெலன் உங்கள் மீது இறங்கும் என கூறுகிறார். பரிசுத்த ஆவியானவர் **பேதுருவிற்குள் வந்தபடியால் இயேசுவை தெரியாது என்று சொன்னவன் ஜீவாதிபதியை கொலை செய்தீர்கள் என்று அறைகூவல் விடுகிறான். இது தான் ஆவியானவர் தரும் உன்னதத்தின் பெலன்!**

பவுல் ஊழியத்தை செய்யும் பொழுது **"என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" (2கொரி. 12: 9)** எனது பெலன் உன்னில் பூரணமாய் விளங்கும் என்று கர்த்தரே கூறுகிறார். **"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலிப்பியர் 4:13)** என்றும் எல்லா சூழ்நிலையிலும மனரம்மியமாக இருக்கிறேன் என்று கூறுவது அபிஷேகத்தினால் வரும் பெலனாகும்.

அன்பு சகோதர, சகோதரிகளே! ஒருவிதத்திலும் எனக்கு பெலனில்லை, சுகமில்லை என்று சோர்ந்து போய் இருக்கிறீர்களா? பரிசுத்த ஆவியின் பெலன் உங்களுக்குள் வரும்பொழுது பெலனடைவீர்கள். சோர்ந்து போய் இருக்கின்ற ஒரு மனிதன் மற்றவர்களை எப்படி பலப்படுத்த முடியும்?பரிசுத்த ஆவியானவரால் மாத்திரமே அது முடியும். சத்துவமில்லாதவர்களுக்கு அவர் சத்துவத்தை பெருகப்பண்ணுவார். அவர்கள் ஓடினாலும் இளைப்படைய மாட்டார்கள்.

எலியா தீர்க்கதரிசி எப்படிப்பட்டவனாக இருந்தான்?ஒரு தடவை தவறு செய்துவிட்டால் பரவாயில்லை, மன்னிக்கலாம் என்பது எலியாவிடம் கிடையாது. பாகால் தெய்வம் ஆனால் பாகாலைத் தேடுங்கள், இல்லை என்றால் அக்கினி வந்து எல்லாவற்றையும் எரித்துவிடும் என்கிறான். ஒரே கல்லில் 300 பேரை வெட்டி போட்டான். அப்படிப்பட்ட ஒரு பயங்கரமான நெருப்பு போன்ற ஒரு தீர்க்கதரிசியின் வாழ்க்கையிலும் சோர்வு வந்தது. **"போதும் கர்த்தாவே,என் ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும்"** என்று கூறுகிறான் **(1 இராஜா. 19 : 1-8)** அதற்கு கர்த்தரிடமிருந்து பதில் வரவில்லை.

ஒரு தூதன் அவனைத் தட்டியெழுப்பி: எழுந்திருந்து போஜனம்பண்ணு என்றான். நீ போக வேண்டிய பிரயாணம் வெகு தூரம் உள்ளது எனக் கூறுகிறான். **1இராஜா.19:7,8,9-ம்** வசனத்தை வாசிப்பீர்கள் என்றால் அங்கே அவன் சாப்பிட்டு அந்த போஜனத்தின் பெலத்தினாலே 40 நாட்கள் இரவு பகல் நடந்து ஓரேபுக்கு வந்தடைந்தான்.

அங்கு சென்றும் புலம்புகிறான். **தேவன், எலியாவே உனக்கு இங்கு என்ன காரியம்? "நீ தமஸ்குவின் வழியாய் வனாந்தரத்திற்குத் திரும்பிப்போய், ஆசகேலைச் சீரியாவின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணி, பின்பு நிம்சியின் குமாரனாகிய யெகூவை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணி, எலிசாவை உன் ஸ்தானத்திலே தீர்க்கதரிசியாக அபிஷேகம் பண்ணு" என்று பெரிய ஒரு வேலையை அங்கே எலியாவிற்கு தருகின்றார்.**

ஆம். பிரியமானவர்களே! நீங்கள் சரீரப்பிரகாரமாக, ஆவிக்குரிய பிரகாரமாக, எப்படி சோர்ந்து போய் இருந்தாலும் பரிசுத்த ஆவியானவர் உங்களை பெலப்படுத்துவார். அது மாத்திரமல்ல, நமக்குள் இருக்கும் அபிஷேகம் மற்றவர்களுக்குள்ளும் கடந்து போக வேண்டும். அது வரைக்கும் நீங்கள் பெலப்படவே வேண்டும். உங்களுடைய வாழ்வில் வரும் அந்த ஆசீர்வாதமும், பெலனும் அடுத்தவர் களுக்குள்ளும் செல்லும். அப்படியில்லாமல் நீங்களே சோர்ந்து போய் ஓரமாக இருந்தீர்கள் என்றால் அந்த பெலன் மற்றவர்களுக்குள் கடந்து செல்லாமல் போய் விடும். **லூக்கா24:49**-ன்படி **உன்னதத்திலிருந்து வரும் பெலனால் நீங்கள் தரிப்பிக்கப்படும் வரைக்கும் நீங்கள் தேவ சமூகத்தில் காத்திருக்க வேண்டும். அப்பொழுது புது பெலனினால் தரிப்பிக்கப்படுவீர்கள்.**

## புது எண்ணெயின் அபிஷேகம் ஒரு உயர்வை கட்டளையிடும்

தாவீதை பற்றி நாம் அதிகமாக படித்திருக்கிறோம். ஆடுகளை மேய்ப்பவன் அரசனாக மாற முடியுமா? இது ஒரு அசாதாரணமான காரியம். மனிதனால் உயர்வை ஒருபோதும் தரமுடியாது.

உலகப் பிரகாரமான உயர்வு படிப்பை வைத்தும், ஒருவருடைய திறமையை வைத்தும் அமைகிறது. உலகம் இப்படியாகவே கணக்கிடும். ஆனால் கர்த்தர் உயர்த்தும் பொழுது அது நம் கண்களுக்கு ஆச்சரியமாகவே இருக்கும். **அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து தூக்கிவிடுகிறார்; எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார். சங்கீதம் 113:7.** ஆம் நாம் எதிர்பார்க்காத அளவிற்கு கர்த்தர் நம்மை உயர்த்துவார்.

உதாரணமாக மோசேயின் வாழ்வைக்குறித்து பார்ப்போம். மோசே தன் மாமனாரின் ஆடுகளை பராமரித்துக்கொண்டு அங்கு அமைதியாக வாழ்ந்துக் கொண்டிருந்தான். அந்த நேரத்தில் அவன் எதிர்பார்க்காத நேரத்தில் திடிரென்று முட்செடியில் கர்த்தர் தோன்றினார். நீ தான் இஸ்ரேல் ஜனங்களை மீட்டுக் கொண்டு வரவேண்டும் என்றார். இது தான் கர்த்தர் தரும் உயர்வு. இது போன்ற உயர்வை தான் கர்த்தர் நமக்கு கொடுக்கின்றார். உலகத்தில் நமக்கு உயர்வு வரவேண்டும் என்று நாம் முயற்சிக்கலாம். ஆனால் கர்த்தருடைய ஆவியானவர் கொடுக்கின்ற உயர்வு தான் எப்பொழுதும் நிலைத்திருக்கிற ஒரு உயர்வு. அது தான் புது அபிஷேகத்தால் வரும் உயர்வு. அதைவிட ஒரு உயர்வை மனிதர்களால் நமக்கு தரவே முடியாது. சவுலே தாவீதை தத்துப் பிள்ளையாக எடுத்திருந்தால் கூட தாவீதை இப்படி ஒரு ராஜாவாக நாம் பார்த்திருக்க முடியாது. தாவீது கடைசி வரை தத்துப் பிள்ளையாக தான் இருந்திருப்பான். ஆனால் தாவீதோடு கர்த்தர் இருந்து புது எண்ணெயால் அபிஷேகம் செய்தபடியால் தான் அவன் சத்துருக்களால் ஒன்றும் செய்ய முடியாத அளவிற்கு ஒரு மிகப் பெரிய உயர்வைப் பெறுகிறான். **"என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது" (சங்கீதம் 23:5)** என்று அறிக்கை செய்கிறான்.

யோசேப்பின் வாழ்விலும் ஒரு ஆச்சரியமான உயர்வை தேவன் கட்டளையிட்டார். யோசேப்பை அனைவரும் மறந்து போயிருந்த நிலையில்தான் கர்த்தர் இடைபடுகிறார். கர்த்தர் யோசேப்பை மறக்கவில்லை. அவனுக்குள் பரிசுத்த ஆவியானவர் இருப்பதை அவன் சகோதரர்கள் உணரவில்லை. **"அப்பொழுது பார்வோன் தன் ஊழியக்காரரை நோக்கி: தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப் போல வேறொருவன் உண்டோ என்று" (ஆதி. 41:38)** கூறுகிறான். பரிசுத்த ஆவியானவர் தான் அந்த உயர்வை, கிருபையை கட்டளையிடுகிறார். வேதத்தில் சிறைச்சாலை என்று சொல்லாமல் சிறைச்சாலை கிடங்கில் யோசேப்பு இருந்ததாக சொல்லப் பட்டுள்ளது. சாதாரண அடிமையாக விற்கப் பட்டவன், காலம் காலமாக சிறையிலேயே இருந்து விடுவேனோ என்று கூட யோசேப்பு நினைத்திருக்க லாம். ஆனால் கர்த்தர் சிறைச்சாலை கிடங்கிலிருந்து நேரடியாக சிங்காசனத்திற்கே கொண்டுவந்து விட்டார். யோசேப்பை அவசரமாக அவசரமாக கொண்டு வந்து வஸ்திரத்தை அணிவித்து, சவரம் செய்து பார்வோனுக்கு முன்பாக நிறுத்தினார்கள். நினைத்து கூட பார்க்க முடியாத ஒரு உயர்வு. ஆம் பிரியமானவர்கேள் இது தான் கர்த்தர் கொடுக்கின்ற மாபெரும் உயர்வு.

தானியேலின் சரித்திரத்தை பாருங்கள்! கர்த்தருக்கு கீழ்ப்படிந்து ராஜ போஜனத்தை சாப்பிட மறுக்கிறான். **தானியேல் 1:20-ம்** வசனத்தில் ராஜா தன் ராஜ்யம் எங்குமுள்ள சகல சாஸ்திரிகளிலும், ஜோசியரிலும், தானியேலையும் அவன் நண்பர் களையும் பத்து மடங்கு சமர்த்தராக காண்கிறான். தொடர்ந்து 2,3,6ம் அதிகாரங்களில் ராஜாக்கள் மாறிக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால் தானியேலுடைய இருக்கை மாத்திரம் அசையவே இல்லை. பாபிலோன் ராஜா, மேதிய ராஜா, பெரிசிய ராஜா இந்த மூன்று ராஜாக்கள் மாறினாலும் ஒருவனாலும் தானியேலை மாற்ற முடியவில்லை. ஏனென்றால், ராஜாக்களும் பணியும் அளவிற்கு தானியேலுடைய காரியம் ஜெயமாய் இருந்தது. அது தான் பரிசுத்த ஆவியானவர் கொடுக்கும் உயர்வு.

**உம்முடைய ராஜ்யத்திலே ஒரு புருஷன் இருக்கிறான், அவனுக்குள் பரிசுத்த தேவர் களுடைய ஆவி இருக்கிறது; உம்முடைய பிதாவின் நாட்களில் வெளிச்சமும் விவேகமும் தேவர்களின் ஞானத்துக்கு ஒத்த ஞானமும் அவனிடத்தில் காணப்பட்டது; ஆகையால் உம்முடைய பிதாவாகிய நேபுகாத்நேச்சாரென்னும் ராஜாவானவர் அவனைச் சாஸ்திரிகளுக்கும் ஜோசியருக்கும் கல்தேய ருக்கும் குறிசொல்லுகிறவர்களுக்கும் அதிபதியாக வைத்தார் (தானியேல் 5: 11)**

புது எண்ணெயால் அபிஷேகம் பண்ணப் பட்ட ஒருவனுடைய உயர்வை ஒரு மனுஷனாலும் தடுக்க முடியாது. அன்னாள் அழகாக **"அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்; அவர்களைப் பிரபுக்களோடு உட்காரவும், மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும் பண்ணுகிறார்"** என்று **1 சாமுவேல் 2:8-ல்** கூறுகிறார். அப்படிப்பட்ட அபிஷேகம் உங்களுக்குள் இருக்க வேண்டும்.

பிரியமான தேவ பிள்ளைகளே! அந்த அபிஷேகத்தை ஸ்தேவான் பெற்றபடியால் தான் பரிசுத்த ஆவியில் நிறைந்தவனாய் பேசினான். **(அப்போஸ்தலர் 6:6,8,10)** அவன் பந்தி விசாரணை செய்தவன் தான். அவனுக்கு அப்போஸ்தலர் பட்டம் கிடையாது. ஆனால், ஸ்தேவானுக்குள் பரிசுத்த ஆவியானவர் இருந்தார்.

பிரியமானவர்களே! நான் சாதாரண ஒரு வேலை செய்கிறவன், என்னை கர்த்தர் பயன்படுத்த மாட்டார் என்று ஒரு போதும் நீங்கள் நினைக் காதீர்கள். எவரையும் பயன்படுத்த தேவனால் கூடும். **புது எண்ணெய், புது அபிஷேகம் உங்களுக்குள் வரும் பொழுது புது கிருபை, புது பெலன், புது உயர்வு உங்களுக்கு நிச்சயம் உண்டாகும். நீங்கள் எதிர்பாராத காரியங்களை கர்த்தர் உங்கள் நடுவில் செய்வார். நீங்களும் தானியேலை போல, யோசேப்பை போல உயர்த்தப்படுவீர்கள். சோர்ந்து போகாதீர்கள்!**

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!**




உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

2 கொரிந்தியர் 9:7

## அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புவதற்கான எளிய வழிகள்

**மணியார்டர் (MO) / காசோலை (cheque) / வரைவோலை (DD)**
**Online Donation (Website)**
**Bank Account / QR Code**
**UPI / Google pay / Paytm / Phonepe**

UPI Google Pay paytm PhonePe

இந்த QR code–ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது 95004 87061 என்ற எண் மூலமும் பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் மூலமாகவும் காணிக்கை அனுப்பலாம்.

## வங்கிக் கணக்குகளின் விபரம்




| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| A/c no. 10848469699 | A/c no. 10848559426 | A/c no. 10848474869 |

**IFS Code: SBIN 0000930**
**State Bank of India, Cantonment, Trichy Main Branch.**

காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற எண்ணிற்கு தொடர்புக்கொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள். நேரில் அல்லது கூட்டங்களில் எங்களை சந்தித்து காணிக்கையை தரவிரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்புக்கொள்ளுங்கள். (10.00 AM - 6.00 PM)

## Cell no. 94888 45627, 80987 42638

உங்களுடைய உற்சாகமான காணிக்கைகள், தசமபாக காணிக்கைகள், பொருத்தனை காணிக்கை மற்றும் ஸ்தோத்திர காணிக்கையை அனுப்பி அன்பரின் ஊழியத்தை தாங்குங்கள்.

கர்த்தர் நிச்சயமாக இதற்குரிய பலனை பல ஆயிரம் மடங்காக தந்து உங்களை ஆசீர்வதிப்பார்!

அன்பரின் ஊழியத்தின் முகவரி : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி – 620018.

அன்பரின் ஊழியம் நடத்தும்

# அப்போஸ்தல தீர்க்கதரிசன பயிற்சி முகாம்
# Apostolic & Prophetic Training Camp

வல்லமையோடு, அற்புதங்களோடு ஊழியம் செய்ய உதவும் பயிற்சி முகாம்

**நாட்கள்**

**மே 17 முதல் 20 வரை**

**புதன் காலை 9 மணிக்கு துவங்கி**

**சனி மதியம் 2 மணிக்கு முடிவடையும்**

*Speakers*

## Dr. Ananda Stira & Family

**இடம்**

அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம்,
10வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு,
தில்லைநகர், திருச்சி.

மேன்மையை உணர காணிக்கை
ரூ.5000/- மட்டுமே

**கற்பிக்கப்படும் பாடங்கள்**

- தேவனோடு உறவாடுதல்,ஆவியின் கனிகள், வரங்கள்
- வேதத்தை புரிந்துகொள்வது, தியானிப்பது, பிரசங்கிப்பது
- அந்தகார வல்லமைகளை மேற்கொள்வது
- திரியேக தேவனின் மகிமை, மாட்சிமை, குணாதிசயங்கள்
- பரலோகம், நரகம், பாதாளம், உலக முடிவு, நியாயத்தீர்ப்பு, நித்தியம்

**மொழி : ஆங்கிலம் - தெலுங்கு**

**பயன்கள் - பலன்கள்:-**

- ஜெப வாழ்வில் மாற்றம்
- மறுரூபப்பட்ட அனுபவம்

தொலைபேசி, மின்னஞ்சல் அல்லது
கடிதம் மூலமும் முன்பதிவு
செய்துகொண்டு
விண்ணப்பப்படிவம்
பெற்றுக்கொள்ளலாம்

**சிறப்பம்சம்:-**

- தெளிவான விளக்கங்கள் அனுபவங்களோடு!

**0431 - 2741926**
**94888 45627**

## அன்பரின் ஊழியம் வாயிலாக கர்த்தர் செய்கிற மகத்தான அதிசயங்கள் ஏராளம் ஏராளம்!

அன்பான தேவ பிள்ளைகளே!

எனது 32ஆம் வயதில் கொடிய மஞ்சள் காமாலை நோய் என்னை தாக்கியது. அதனால் மரணப் பள்ளத்தாக்கில் நான் இருக்கும்பொழுது சர்வ வல்லமையுள்ள தேவன் தாமே, பரலோக மகிமையை எனக்கு காண்பித்து, மீண்டும் என்னை உயிர்ப்பித்து தமது சுவிசேஷ ஊழியத்தை செய்யும்படி கட்டளையிட்டார்.

அந்த நாளிலிருந்து நான் கிராமம் கிராமமாக சென்று கர்த்தருடைய சுவிசேஷத்தை அறிவித்து வந்தேன். சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்ட பல மக்களின் கண்ணீர் துடைக்கப்பட்டது. பிசாசின் பிடியில் இருப்போர் இயேசுவின் நாமத்தினால் விடுதலையானார்கள். பல்வேறு நோய்களினால் கஷ்டப்பட்டோர் சுகம்பெற்றனர். மரணப் படுக்கையிலிருந்து அநேகர் எழும்பினர். குடும்பத்தில் மெய்யான சந்தோஷம், சமாதானத்தை பெற்று தேவனை துதித்தார்கள்.

எங்களைப் போலவே எங்கள் இளைய மகள், மருமகன் மற்றும் பேரன் அனைவரும் கர்த்தருடைய அழைப்பை தனிப்பட்ட முறையில் பெற்று ஊழியத்தை தொடர்ந்து செய்துவருகிறார்கள். கிறிஸ்துவின் அறிவாகிய ஒளி இருளில் இருக்கிற மக்களுக்கு வெளிச்சத்தை தரவேண்டும் என்பதற்காக குடும்பமாக ஊழியத்தை தொடர்ந்து செய்கிறோம்.என் உடல்நிலை மிகவும் பலவீனப்பட்டாலும் கர்த்தர் தருகின்ற பெலத்தால் ஊழியத்தை செய்து வருகிறேன். பல்வேறு இடங்களில் உள்ள சீதோஷணம் மற்றும் தண்ணீர், சாப்பாடு என் உடலை பாதிக்கத்தான் செய்கிறது. இருப்பினும், முன் வைத்த காலை பின் வைக்காமல் கிறிஸ்துவுக்காக ஓடிக்கொண்டு இருக்கிறேன். **கிராமங்களில் ஆரம்பித்த இந்த ஊழியம் இன்று கொலோசெயர் 1:6—ன்படி உலகம் எங்கும் பரம்பி பலன் தருகிறது.**

### நம் குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் நடைபெற்ற ஒரு உண்மை நிகழ்ச்சி!

அன்பரின் ஊழிய குடும்ப ஆசீர்வாதக் கூட்டங்களில் கர்த்தர் அநேகருடைய கண்ணீரை துடைக்கிறார். ஒரு முறை திருப்பத்தூரில் நடைபெற்ற கூட்டத்தில் நான் பேசும் பொழுது நடந்த ஒரு சம்பவத்தை இங்கு எழுதுகிறேன். திருமணமான ஒரு சகோதரர் எப்பொழுதும் குடித்து, வெறித்து 20 வருடமாய் மனம் போன போக்கில் வாழ்ந்துக்கொண்டிருந்தார். அதனால் அவருடைய மனைவி, மகள் அவரைவிட்டு பிரிந்து சென்றார்கள். மகளுக்கும் கேன்சர் நோய் இருந்தது. திருப்பத்தூரில் நடைபெற்ற நம் கூட்டத்திற்கு அந்த சகோதரரின் மனைவியும், மகளும் வந்திருந்தார்கள். இதை அறிந்துக்கொண்ட அந்த சகோதரன் தன் மனைவியை அடித்து, இழுத்துச்செல்லவேண்டும் என எண்ணி, உருட்டு கட்டையோடு கூட்டத்திற்கு வந்திருந்தார். அந்த நேரத்தில் நான் இயேசுவின் அன்பைப்பற்றி மேடையில் பிரசங்கம் செய்து கொண்டிருந்ததை அந்த சகோதரன் கேட்டார். ஜெபவேளையில் இயேசுகிறிஸ்துவின் சிலுவை காட்சியை ஒரு ஷணப்பொழுதில் கண்ட அந்த சகோதரான் முற்றிலும் மனம் மாறினார். உருட்டு கட்டையை தூக்கி எறிந்துவிட்டு மேடைக்கு வந்து சாட்சி சொன்னார். மனைவியோடு சேர்ந்து வாழ முடிவெடுத்தார். அதுவுமல்லாமல், அவருடைய ஒரே மகளுக்கு தொண்டையிலிருந்த கேன்ஸர் கட்டியை கர்த்தர் இயேசு அற்புதமாக அந்த நாளில் சுகமாக்கினார்.

ஒரே நேரத்தில் பாவி மனந்திரும்பினான். குடும்பம் இணைந்தது. கேன்சர் நோய் குணமானது. இவ்வாறு கர்த்தர் நம் கூட்டங்களில் செய்து வருகிற அதிசயங்கள் ஏராளம் ஏராளம். நீங்களும் இந்த ஆத்தும அறுவடையில் பங்கு பெற வேண்டும் என்பதற்காக இத்தகைய உண்மை சம்பவங்களை உங்களோடு பகிர்ந்துக்கொள்கிறேன். விசுவாசத்துடன் படியுங்கள். நம்முடைய கூட்டங்களுக்கு நீங்களும் வாருங்கள். கண்ணீரில் இருக்கிற மக்களையும் அழைத்து வாருங்கள். கர்த்தர் உங்கள் துக்கத்தை சந்தோஷமாக மாற்றுவார்.






அன்பு பங்காளர்களே,

மாதந்தோறும் வெளியிடங்களில் நடத்துகிற கூட்டங்களுக்கு பல இலட்சங்கள் தேவைப்படுகிறது. உங்கள் குடும்பத்தின் சார்பாக உங்களால் முடிந்த காணிக்கையை உற்சாகமாய் கொடுத்து கூட்டங்கள் நடத்துவதற்கு உதவி செய்யும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு குடும்ப ஆசீர்வாதக் கூட்டம் பெரிய அளவில், பட்டணங்களில் நடத்த 1 முதல் ஒன்றரை லட்சம் ரூபாய் (Rs.1,50,000/-) தேவை.

சுவிசேஷ பொது கூட்டம் நடத்த 5 முதல் 10 லட்சம் ரூபாய் தேவை. (Rs.5,00,000/- to 10,00,000/-)

இந்த கூட்டங்களின் வாயிலாக சந்திக்கப்படும் ஆத்துமாக்களின் பலனை கர்த்தர் உங்கள் கணக்கிலும் எழுதுவார். கர்த்தர்தாமே உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் அதிகமாய் ஆசீர்வதிப்பாராக.

தொலைக்காட்சி வாயிலாக சுவிசேஷத்தை பல மொழிகளில் அறிவிப்பதற்காக ஜெபியுங்கள். ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சி 30 நிமிடம் ஒளிபரப்ப 25 ஆயிரம் முதல் 30 ஆயிரம் (Rs.25,000/- to 30,000/-) தேவைப்படுகிறது. உங்கள் குடும்பத்தின் சார்பில் இந்த மாபெரும் ஊழியத்தை தாங்கலாம்.

இதுவரை நீங்கள் அன்பரின் ஊழிய பங்காளராக இல்லையென்றால் கீழ்க்கண்ட வாட்ஸ்அப் எண்ணிற்கு உடனே தொடர்புக்கொண்டு பங்காளராவதற்கான தகவல்களை அறிந்துக் கொள்ளுங்கள்.

**Whatsapp No. - 95004 87061**

# கான்பூரில் கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாள் பண்டிகை




போதகர்களுடன் Dr.ஆனந்த ஸ்திரா





அதிகாலை 2 மணியளவில் கல்லறை தோட்ட மைதானத்தில்
நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட மூவாயிரம் மக்கள்












ஆலய ஆராதனையில் Dr.ஜேன் ஜாஷ்வா அவர்களின் சிறப்பு தேவ செய்தி



# Praise Report
# துதி அறிக்கை

## 6 வருட வழக்கிலிருந்து அற்புதமாக விடுதலையாக்கிய கர்த்தர்



என் பெயர் நளினி ஜூலியட். ஒரு நாள் என் கணவரும் என் மகனும் வண்டியில் போய்க் கொண்டிருந்தப்பொழுது வண்டி டையர் வெடித்து விபத்து ஏற்பட்டது. என் கணவர் பின்புறமாக கீழே விழுந்ததில் பலத்த அடிபட்டு சிகிச்சை பலனின்றி மரித்து விட்டார். இந்த சம்பவத்தினால் என் மகன் மீது அதி வேக கவனக்குறைவு என கேஸ் போட்டு விட்டார்கள். இந்த கேஸ் நிமித்தம் நாங்கள் 6 வருடமாக மிகுந்த கண்ணீர் வடித்துக்கொண்டு சமாதானம் இல்லாமல் இருந்து வந்தோம்.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் தாம்பரத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு **Rev.Dr.A. ஜாஷ்வா Dr. ஜேன் ஜாஷ்வா, ஜோனத்தன் மோசஸ் ராஜ் ஸ்திரா** அனைவரும் வந்திருந்து கூட்டத்தை நடத்தினார்கள். அந்த கூட்டத்திற்கு நானும் என் மகனும் மிகுந்த பாரத்துடன் வந்து அமர்ந்திருந்தோம். அப்பொழுது **ஜெப வேளையில் Dr. ஜேன் ஜாஷ்வா** அவர்கள் **"இந்த நாளில் இரண்டு பேர் ஒரு கேஸ் நிமித்தம் அதிக பாரத்துடன் வந்திருக் கிறீர்கள். கர்த்தர் தாமே ஒரு வாரத்தில் அந்த கேஸில் ஒரு வெற்றியைத் தருவார்"** என தீர்க்கதரினமாக சொன்னார்கள்.

**சகோதரி சொன்னதுபோலவே, ஒரு சில நாட்களில் புதிய இன்ஸ்பெக்டர் வந்து, அந்த கேஸை எடுத்துப்பார்த்து இது ஒன்றுமில்லை என கூறி அந்த கேஸிலிருந்து என் மகன் விடுதலையாகும்படி கர்த்தர் தயை செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.**

**- சகோதரி நளினி ஜூலியட் இன்பராஜ்**
**சென்னை.**

## அற்புத விடுதலையை அருளிய கர்த்தர்!

எங்களது இளைய மகன் ஆறு வருடமாக தூக்கம் இல்லாமல் கஷ்டப்பட்டு வந்தான். தற்செயலாக எங்கள் பெற்றோரை பார்க்க நாங்கள் இந்தியா விற்கு வந்திருந்தோம். அச்சமயத்தில் அன்பரின் ஊழியப் பத்திரிக்கையை என் பெற்றோர் வீட்டில் பார்க்க நேரிட்டது. அதில் எழுதப்பட்டிருந்த சாட்சிகள் எங்களை மிகவும் தொட்டது. உடனே **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களை நேரில் சந்தித்தோம்.



**சகோதரர் அவர்கள் எங்கள் மகனுடைய தலையில் கை வைத்து ஜெபித்த உடனே மகன் விடுதலை பெற கர்த்தர் கிருபை செய்தார். இப்பொழுது மகன் இரவில் நன்றாக தூங்கு கிறான். எந்தவிதமான ஒரு தொந்தரவுகளும் இல்லாமல் சமாதானத்துடன் மகன் காணப்படு கிறான். கர்த்தருக்கே மகிமை! நாங்கள் செய்த பொருத்தனைபடி S.J.Saves Trust-ல் ஏழைப் பிள்ளைகளுக்கு உதவி செய்கிறோம்.**

**- சகோ. எடிசன், அருப்புக்கோட்டை.**

## ஊழியத்தை நேசித்து தாங்கும் அன்பு பங்காளர்!



அன்பரின் ஊழியத்தை குறித்து எங்கள் உறவினர் சுபாஷ் மூலம் அறிந்து கொண்டோம். ஊழியத்தை அறிந்த அந்த நாட்களிலிருந்து **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் தருகின்ற தேவசெய்தி மற்றும் ஒவ்வொரு மக்களுக்காகவும் ஏறெடுக்கிற ஜெபம் எங்கள் இருவரின் உள்ளத்தை மிகவும் தொட்டது. அன்றிலிருந்து நானும், என் மனைவியும் **சகோதரர் செய்துக் கொண்டிருக்கின்ற எல்லா ஊழியங்களுக்கும் மாத சம்பளம் வாங்கும் நாங்கள் ஒவ்வொரு மாதமும் உற்சாகமாய் தாங்கி வருகின்றோம். எங்களை வழி நடத்தும் தேவனுக்கு ஸ்தோத்திரம்!**

**- திரு. ராகேஷ், ராஜமன்றி.**

## அறுவை சிகிச்சையின்றி அற்புத சுகம் தந்த கர்த்தர்!



என் பெயர் கிறிஸ்டி. கடந்த மார்ச்1-ம் தேதி அன்று மாலை என் அண்ணனுக்கு ஒரு விபத்து ஏற்பட்டு காதில் இரத்தம் வடிந்த நிலையில், மதுரை அப்பொல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். உடனே நானும் என் மகனும் ஜெபித்துவிட்டு மருத்துவமனைக்கு சென்றோம். அண்ணனுக்கு மூளையில் கசிவு இருக்கிறது ஆகவே இரண்டு நாள் அப்சர் வேஷனில் வைத்திருக்கிறோம். அதன்பின் தான் சொல்ல முடியும் என கூறிவிட்டனர். அத்துடன் தேவைப் பட்டால் தலை மற்றும் தோள் பட்டையில் ஆப்ரேஷன் செய்யவேண்டும் எனவும் கூறியிருந்தனர்.

**உடனே நான் Dr. ஆனந்த ஸ்திரா அவர்களின் வாட்ஸ் அப்பிற்கு செய்தி அனுப்பி என் அண்ணனுக்காக ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டேன். சகோதரர் ஜெபித்து இரண்டு வசனங்களை அனுப்பியிருந்தார்கள். அந்த வசனம் எங்களுக்கு ஆறுதலாக இருந்தது. அத்துடன் மருத்துவரும் 3-வது நாளில் நல்ல ரிப்போர்டை கூறினார். மூளையில் ஏற்பட்ட இரத்த கசிவு எல்லாம் நின்றுவிட்டது. நார்மல் நிலைக்கு வருகிறது. இனி எந்த ஆப்ரேஷனும் தேவையில்லை என கூறிவிட்டனர். நன்றாக பேசுகிறார்கள். ஜீவனோடு காத்துக்கொண்ட தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம். ஏற்ற நேரத்தில் பாரத்துடன் ஜெபித்த சகோதரர் அவர்களுக்கும் எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம்.**

**- திருமதி. கிறிஸ்டி, திண்டுக்கல்.**

## பயத்தை நீக்கி நல்ல மதிப்பெண்களைத் தந்த கர்த்தர்!



என் பெயர் மணிமேகலை. எனக்கு மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள். என்னுடைய 2-வது மகளுக்கு இயேசுவின் கிருபையால் மருத்துவபடிப்பிற்கான **free seat** கிடைத்தது. மகள் முதல் ஆண்டு மருத்துவ தேர்வு எழுதப்போகும் நேரத்தில் அதிக பயத்துடன் காணப்பட்டாள். அப்பொழுது திருச்சியில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு மகளை அழைத்து வந்தேன். ஜெப வேளையில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் தீர்க்கதரிசனமாக சொன்னார்கள். **"இங்கு ஒரு மகள் தேர்வை முன்னிட்டு மிகுந்த பயத்துடன் வந்திருக்கிறாள். கர்த்தர் அவள் பயத்தை நீக்கி தேர்வு நன்கு எழுதி, ரேங்க் ஹோல்டராக வரும்படி உதவி செய்வார்"** என கூறி என் மகளை மேடைக்கு வரும்படி அழைத்து ஜெபித்தார்கள்.

அதன்பின் மகள் இயேசுவின் கிருபையால் தேர்வை நன்கு எழுதினாள். Distinction & Honors Rank-ம் பெற்றாள். பயத்தை நீக்கி ஜெயத்தை தந்த கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன். எப்பொழுதும் எங்களுக்காக ஜெபிக்கிற அப்பா அவர் களுக்கும் எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம்.

- திருமதி. மணிமேகலை, பட்டுக்கோட்டை.

## தடைகளை நீக்கி திருமணத்தை வாய்க்கச் செய்த கர்த்தர்!



என் பெயர் மேரி கிளாரிஸ். என்னுடைய திருமணத்தில் பல ஆண்டுகளாக தடைகள் இருந்துக்கொண்டே இருந்தது. வயது 32 ஆகி விட்டது. அந்த சூழ்நிலையில் திருச்சி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் 2021-ம் ஆண்டு ஜனவரி 1-ம் தேதி நடைபெற்ற புத்தாண்டு வாக்குத்தத்த கூட்டத்தில் நானும் நம்பிக்கையோடு கலந்துக்கொண்டேன். ஜெப வேளையில் Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் கர்த்தர் தாமே திருமண தடைகளை நீக்கி திருமண காரியங்களை வாய்க்கச் செய்வார் என்று பரிசுத்த ஆவியானவர் மூலம் தீர்க்கதரிசனமாக கூறினார்கள். சகோதரர் அவர்கள் கூறின தீர்க்கதரிசனத்தின்படியே அதே வருடம் மே மாதம் 10-ம் தேதி எனக்கு திருமணம் நடைபெற்றது. தடைகளை நீக்கிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

- திருமதி. மேரி கிளாரிஸ், மதுரை.

## ஊக்கமான ஜெபத்தைக் கேட்டு வேலையைக் கொடுத்த கர்த்தர்!

நான் அன்பரின் ஊழிய நீண்ட நாள் பங்காளர். அன்பரின் ஊழியத்தை தொடர்ந்து உற்சாகமாய் தாங்கி வருகிறேன். என் பேரனுடைய பெயர் ஜெபஸ்டீன் தியாகராஜ். பி.இ. படித்து முடித்து வேலை இல்லாமல் கஷ்டப்பட்டான். உடனே நான் Dr.ஆனந்த ஸ்திரா ஐயா அவர்களுக்கு கடிதம் வாயிலாக தொடர்புக்கொண்டு பேரனுக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். உடனே ஐயாவும் அம்மாவும் போன் வாயிலாக என்னோடு தொடர்புக்கொண்டு பேரனுக்காக ஊக்கமாக ஜெபித்தார்கள். அதன்பின் பேரனுக்கு பெங்களூரில் வேலை கிடைத்தது. அதற்காக கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன்.

- திருமதி. மேரி நவமலர், Rtd. Tr., திருநெல்வேலி.


**எமது You Tube சேனல்களை Subscribe செய்யவும்**



Ministry of Jesus - Dr. Ananda Stira



Dr Jane Joshua

My Deliverance Church

**எமது முகநூல் பக்கங்கள் (Face book)**

Ministry of Jesus (Anbarin Oozhiyam) @ministryofjesus.in

Ananda Stira @dranandastira

Margretstira

Jane Joshua @DrJaneJoshua

My Deliverance Church @mydeliverance.church

Rev.Dr.A. Joshua @RevDrAJoshua

Ministry of Jesus
dr. janejosh
jonathanmosesrajstira

ministryofjesus.in

drjane15

# மேரி ஜோன்ஸ்

## (1784 - 1864)



### பிறப்பும் குடும்ப சூழலும்

மேரி ஜோன்ஸ் 1784-ம் ஆண்டு டிசம்பர் 16-ம் தேதி வேல்ஸ் நாட்டிலுள்ள இந்திரிஸ் மலையடி வாரத்திலுள்ள ஒரு சிற்றூரில் பிறந்தாள். தந்தை நெசவுத்தொழில் செய்பவர். ஜோன்ஸ் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தாலும் சிறுவயதிலிருந்தே கடுமையாக உழைக்கும் பண்பை வளர்த்துக்கொண்டாள். வீட்டில் தன் தாயாருக்கு எல்லா வேலைகளையும் செய்து கொடுத்து விட்டு பள்ளிக்கு செல்வாள். வீட்டில் வளர்க்கிற கோழிகள் விடும் முட்டைகளை விற்று தாய்க்கு உதவியாக இருப்பாள்.

### பரிசுத்த வேதாகமத்தின் மீது கொள்ளை ஆசை

சிறுமி மேரி ஜோன்ஸ்சுக்கு சொந்தமாக ஒரு வேதாகமம் வாங்கவேண்டும் என்ற ஆசை ஒவ்வொருநாளும் அதிகரித்துக் கொண்டே இருந்தது. அந்நாட்களில் வேதாகமம் கிடைப்பது மிகவும் அரிது. அப்படியே கிடைத்தாலும் ஏழைகள் அதை வாங்க முடியாது. விலையோ மிக அதிகம். மேரி ஜோன்ஸோ பரம ஏழை. ஆகவே அதற்கான முதல் முயற்சியாக பணத்தை சேமிக்க ஆரம்பித்தாள்.

ஆறு ஆண்டுகள் கடந்தன. உள்ளத்தின் வாஞ்சை வளர வளர அவள் சேமித்து வைத்திருந்த பணமும் உயர்ந்தது. ஒரு நாள் மகிழ்ச்சி பொங்க துள்ளிக் குதித்தாள். காரணம் பரிசுத்த வேதாகமம் வாங்குவதற்கான பணம் முழுவதும் சேர்ந்துவிட்டது. ஆகவே 25 மைல்கள் தூரத்திலுள்ள ஒரு போதகரிடம் வேதாகமம் இருப்பதை அறிந்து, வேதாகமத்தை வாங்குவதற்காக அதிகாலமே உற்சாகத்துடன் தன் நடை பயணத்தை துவங்கினாள்.

போதகர் சார்லஸிடம் சென்று தான் சேமித்து வைத்திருந்த பணத்தைக் மகிழ்ச்சியோடு கொடுத்தாள். அந்த பெரும் மகிழ்ச்சியில் இடி விழுந்தது போல் மேரிக்கு ஏமாற்றம் காத்திருந்தது. வேதாகமம் இல்லை என்ற பதிலை போதகர் கூறியதும் அவள் தேம்பி தேம்பி அழ ஆரம்பித்தாள். போதகரின் மனம் உடைந்தது.

வேதாகமத்தின் மீது ஓர் சிறுமிக்கு இருக்கிற வாஞ்சையும், அவளின் பிரயாசமும் போதகரின் உள்ளத்தை அசைத்தது. உடனே தன் சொந்த உபயோகத்திற்காக வைத்திருந்த அழகிய வேதாகமம் ஒன்றை எடுத்து வந்து சிறுமியின் கைகளில் கொடுத்தார்.

### சர்வதேச வேதாகமச் சங்கம் உதயமானது

வேதாகமத்தை வாங்கிக் கொண்ட சிறுமி ஜோன்ஸ் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. தன் ஊரை நோக்கி ஓடோடி வந்தாள். உறவினரை அழைத்தாள். உற்சாகத்தால் நிறைந்தாள். வேதாகமத்தை உரக்க வாசித்தாள். **மேரி ஜோன்ஸ்க்கு வேதாகமத்தின் மீது இருந்த வாஞ்சையும் ஆர்வமும் சர்வதேச வேதாகமச் சங்கம் (International Bible Society) தோன்ற ஒரு காரணமாயிருந்தது.**